79

# ஒத்தக்கால்மண்டபம் பே[...] செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை
[...]லை திரு.மு.செந்தில்குமார்

ந.க.எண்.574/2023/ஆ
ம.உரிமம் எண்.05/2023-24

நாள்:12.01.2024

பொருள்: மனைப்பிரிவு அ[...] – ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சி வார்டு எண்.6 தெற்கு தோட்டப் பகுதியில் க.ச.எண்.773/5D2, 773/5E1, 773/5E2, 773/5F1, 773/6D2, 773/6E1, 773/6E2, 773/6F1 -ல் 1.9504 ஏக்கர் (அ) 7893 ச.மீ பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க – திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது – நிபந்தனைகளுக்கு உட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவு பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1). திரு.K.பிரேம்ராஜ், சென்னை அவர்கள் கோவை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு விண்ணப்பம் அனுப்பிய நாள். 23.01.2023.

2). உறுப்பினர் செயலர் / கோயம்புத்தூர் உள்ளூர்திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண். CBELPA/CS15L2J6/2022 2022/TCP, நாள்.03.03.2023 திட்ட அனுமதி எண்.118/2023, ம.வ/கோ.உ.தி.கு எண்.107/2023 நாள்.03.03.2023.

3). பேரூராட்சிக்கு சாலை மற்றும் பொது ஒதுக்கீடு ஒப்படைப்பு செய்யப்பட்ட தானபத்திரம் எண்.2219/2023 நாள். 25.02.2023.

4). ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.119/2023, நாள்.10.01.2024.

5). இவ்வலுவலக செலுத்து சீட்டு எண்.1442/2023-24, நாள்.12.01.2024.

-----

உத்தரவு:

கோயம்புத்தூர் மாவட்டம், ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 தெற்கு தோட்டப் பகுதியில் க.ச.எண்.773/5D2, 773/5E1, 773/5E2, 773/5F1, 773/6D2, 773/6E1, 773/6E2, 773/6F1 -ல் 1.9504 ஏக்கர் (அ) 7893 ச.மீ பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க, பார்வை 1–ல் காணும் விண்ணப்பதாரர் விண்ணப்பித்துள்ளதைத் தொடர்ந்து, பார்வை 3ல் காணும் விவரப்படி மேற்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது இடங்களை, பேரூராட்சிக்கு தானக்கிரையம் மூலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, பார்வை 2ல் காணும் உறுப்பினர்/செயலர் கோவைஉள்ளூர் திட்டம் அவர்களின் கடிதத்தின்படி சாலையமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து உறுப்பினர் செயலர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதத்தின் படி 118/2023 என திட்ட அனுமதியும் ம.வ/கோ.உ.தி.கு எண்.107/2023 ன்படி மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 4ல் காணும் பேரூராட்சியின் மன்றத் தீர்மானம் எண்.119/2023 நாள்.10.01.2024ன்படி இம்மனைப்பிரிவிற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பார்வை 5 ல் காணும் செலுத்துச்சீட்டின்படி மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு உரிய தொகை செலுத்துப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டு வார்டு எண்.6 தெற்கு தோட்டப் பகுதியில் க.ச.எண்.773/5D2, 773/5E1, 773/5E2, 773/5F1, 773/6D2, 773/6E1, 773/6E2, 773/6F1 -ல் 1.9504 ஏக்கர் (அ) 78.93 ச.மீ பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு, பார்வை 2–ல் கண்டுள்ள, உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களது உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 6 முடியவும், மனைப்பிரிவு நிபந்தனைகள் 1 முதல் 13 நிபந்தனைகளுக்குட்பட்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும், மனைப்பிரிவு அங்கீகார வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

Scanned with CamScanner

87

81

//2//

## நிபந்தனைகள்

1. அங்கீகாரம் பெறப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் மனையிடத்தில் பொதுமக்களின் பார்வைக்கு தெளிவாகத் தெரியும் வகையில் 6 X 4 அளவுள்ள நிரந்தர அறிவிப்பு பலகை வைக்கப்படல் வேண்டும்.

2. இம்மனைப்பிரிவில் உள்ள மனைகள் விற்பனை செய்யப்படும் பொழுது காலிமனையிடவரி செலுத்தியது குறித்த விவரம் கிரயப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

3. இம்மனைப்பிரிவில் கண்டுள்ள மனைகள் விற்பனை செய்யப்படும் வரை மனை உரிமையாளரால் காலிமனைவரி ஆறு மாதகாலத்திற்கு ஒரு முறை பேரூராட்சியில் செலுத்தப்பட வேண்டும். மேலும் விற்பனை செய்யப்பட்ட பின்பு இம்மனையில் கட்டிடம் கட்டும் வரையில் ஆறு மாதகாலத்திற்கு ஒரு முறை பேரூராட்சி அலுவலகத்தில் காலிமனைவரி செலுத்தப்பட வேண்டும் எனவும் மனை உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவர்கள் பேரூராட்சி நிர்வாகம் தேவைப்படும் பொழுது எவ்வித அறிவிப்புமின்றி பேரூராட்சி மூலம் அகற்றப்படும்.

5. மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிட்டுலுள்ளபடியே மனைகள் விற்கப்பட வேண்டும். விதிமுறைகளுக்கு முரணாக ஒருமனையிடத்தை பகுதியாக பிரித்து விற்பனை செய்யக் கூடாது.

6. இம்மனைப்பிரிவில் மனுதாரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளில் குறைபாடுகள் ஏதும் கண்டறியப்பட்டால்மனைப்பிரிவுஉரிமையாளர் நிபந்தனைகள் ஏதும் இன்றி தனது சொந்த செலவில் செய்து கொடுக்கப்படவேண்டும்.

7. மனைப்பிரிவில் தானசெட்டில்மெண்ட் கிரையபத்திரத்தின் மூலம் ஒப்படை செய்யப்பட்ட பொது இடம் மற்றும் சாலைகள் செயல் அலுவலர் பெயருக்கு பட்டாமாறுதல் மற்றும் உட்பிரிவு செய்து ஒப்படை செய்ய வேண்டும்.

12/2/24

செயல் அலுவலர்
ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சி
கோயம்புத்தூர் 641032

12/2/2024

பெறுதல்:
திரு.K.பிரேம்ராஜ்,
15/8, 3 வது மெயின் ரோடு,
ராஜா அன்னாமலைபுரம்,
சென்னை–600028

நகல்:
1) உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.
2) சார்பதிவாளர், கிணத்துக்கடவு சார்பதிவாளர் அலுவலகம், கிணத்துக்கடவு,கோயம்புத்தூர்.
3) வட்டாட்சியர் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகம், மதுக்கரை, கோயம்புத்தூர்.

Scanned with CamScanner